**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 61/2022**
**Prosecution Witness - PW1**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ராமராஜன் |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09.09.2025.
(Accused Present).
முதல் விசாரணை–

நான் தற்போது பரசேரியில் வசித்து வருகிறேன். நான் தென்னக ரயில்வேயில் மின் பிரிவில் வேலை பார்த்தேன். தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 24.09.2015 அன்று காலை சுமார் 8– 9 மணிக்குள் வயலுக்கு எப்பொழுதும் செல்வதுபோல தோட்டியோடு அருகில் உள்ள நுள்ளியர வயலுக்கு தென்னை நடுவதற்காக அங்கு வேலை பார்த்து கொண்டிருந்தேன். எனது சகோதரன் ஆஜர் எதிரி சைலஜன் இங்கு வேலை செய்யகூடாது, மீறி வேலை செய்தால் உன்னை கொன்றுவிடுவேன் என்று சொல்லி என்னை மிரட்டினார். நான் உயிருக்கு பயந்து என் கைபேசியில் போலீசாரை அழைத்தேன். சிறிது நேரத்தில் இரண்டு காவலர்கள் வந்தார்கள். அதில் ஒருவர் எனக்கு தெரிந்த உதவி ஆய்வாளர் சுவாமிதாஸ். ஆய்வாளர் வருவதற்கு முன்பு, எனது கைபேசி கீழே விழுந்தது, நான் எனது கைபேசியை எடுக்க குனிந்தபோது ஆஜர் எதிரி மண்வெட்டியால் எனது தலையில் அடித்தார். நான் கொஞ்சம் குனிந்துவிட்டதால் அடி என் முதுகில் பட்டது. தலையில் பட்டிருந்தால் என் உயிர் போயிருக்கும். அதன் பிறகு தான் ஆய்வாளர் வந்தார். என்ன காரணமாக இருந்தாலும் இங்கு சண்டை செய்யகூடாது என்று சொல்லி எங்களை, சுவாமி தாஸ் விலக்கி விட்டார். வலி

அதிகமாக இருந்தால் நான் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு சிகிட்சைக்கு சென்றேன். போகும் வழியில் எனது ஆட்டோவை இடை மறித்து ஆஜர் எதிரி காரில் வந்து மண்வெட்டி வைத்து முகத்தில் குத்தியதால் என் முன் பற்கள் அனைத்தும் போய்விட்டன. நான்ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு சென்று உள்நோயாளியாக சிகிட்சை எடுத்தேன்.24.09.2015 சாய்ந்திரம் அல்லது அடுத்த நாளா என்ற விபரம் நினைவில் இல்லை. ஆனால் போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்த விபரங்களை கூறினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல. என்னுடைய கையொப்பத்தைபோல யாரோ போட்டிருக்கிறார்கள்.

(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

நான் 25.09.2015 அன்று ஆசாரிபள்ளம் அரசு மருத்துமணையில் சிகிட்சையில் இருக்கும்போது, இரணியல் காவல் நிலையத்தில் இருந்து போலீசார் வந்து என்னை விசாரித்து, நடந்த சம்பவத்தை குறித்து என்னிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்து அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றால், சரிதான். ஆனால் தற்போது காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல என்று நான் உண்மைக்கு புறம்பாக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது சகோதரன் பெயர் மகாதேவன். அவர் புத்திசுவாதீனம் இல்லாதவர் என்றால், சரிதான். எனது தகப்பனார் 1975ம் வருடம் இறந்துவிட்டார் என்றால், இறந்துவிட்டார் வருடம் நினைவில் இல்லை. எனது அப்பாவிற்கு 10 ஏக்கருக்கு மேல் சொத்து உண்டு என்றாலும், அவருக்கு நாங்கள் 11 பிள்ளைகள் என்றாலும்,

சரிதான். எனது தகப்பனார் இறந்தபிறகு, எனது தாயார் மற்றும் சகோதரர்களுடன் பாகபிரிவினை செய்துகொண்டோம். மகாதேவனை பராமரிப்பதற்கு நான் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பாதுகாவலராக இருக்க உத்தரவு பெற்றேன் என்றால், சரிதான். அந்த உத்தரவு பெற்றபோது நான் மதுரையில் வேலை பார்த்தேன். நான் மதுரையில் இருக்கும்போது, மகாதேவனின் சொத்துகள் பலவற்றை விற்றேன் என்றால், நீதிமன்ற அனுமதியுடன் விற்றேன். அந்த பணம் நீதிமன்றத்தில் உள்ளது. அவ்வாறு சொத்துகளை விற்பதற்கு எனக்கு உரிமையில்லை என்றால், நீதிமன்ற அனுமதியுடன் விற்றேன். அதன் விலை ரூ.1 கோடி இருக்கும் என்றால், சரியல்ல. 1 கோடிக்கும் குறைவாக தான் இருக்கும். எனக்கு உரிமைப்படாத சொத்தினை நான் விற்றதன் காரணமாக, ஆஜர் எதிரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து என்னை பாதுகாவலர் நிலையில் இருந்து நீக்கி ஆஜர் எதிரியை பாதுகாவலராக நியமித்தது என்றால், சரிதான். எனவே ஆஜர் எதிரி மகாதேவனின் பாதுகாவலர் என்ற உரிமையில் அவருடைய சொத்தில் சம்பவ தினதன்று ஆஜர் எதிரி அந்த வயலில் வேலை பார்த்து கொண்டிருந்தார் என்றால், அந்த சொத்து எனக்கு உரிமைப்பட்டது. ஆஜர் எதிரி வயலில் வேலைசெய்ய விடாமல் நானும் என்னுடன் வந்த அடியாட்களும் தடுத்தோம் என்றால், சரியல்ல. அவர் தொடர்ந்து வேலை பார்த்ததால் நான் கைபேசி மூலம் போலீசை அழைத்தேன் என்றால், நான் உயிருக்கு பயந்து போலீசை அழைத்தேன். சுவாமி தாஸ் மற்றும் நடராஜன் போலீசார் வந்து காலை 11 மணியளவில் எங்களை சமாதானம் செய்தார்கள் என்றால், அந்த நேரம் எனக்கு தெரியாது. போலீசார் சென்றுவிட்ட பிறகு நானும் என்னுடன் வந்த அடியாட்களும் வெட்டுகத்தியை கொண்டு ஆஜர் எதிரியின் இடது கையில் வெட்டினோம் என்றால் சரியல்ல. நானும் , என் உடன் வந்த அடியாட்களும் அவரை தாக்கியபோது அவர் தன்னை தற்காத்து கொள்வதற்காக தள்ளிவிட்டபோது , நான் கீழே விழுந்ததில் சிறு காயம் ஏற்பட்டது என்றால், சரியல்ல. நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டதுபோல எதிரி தாக்கவும்

இல்லை என்றாலும், வழக்கிற்காக உண்மைக்கும் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**